# மெட்ரோ கட்டுமான பணி தீவிரம்

**சென்னை, நவ. 30–**

வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே, 3,770 கோடி ரூபாய் செலவில், 9.1 கி.மீ., மெட்ரோ ரயில், பாதை பணி நடக்கிறது. தண்டவாளம் அமைக்கும் பணி முடிந்துள்ளது.

நிலைய கட்டுமானம், பாதை சிக்னல் பணி உள்ளிட்ட பணிகள் நடந்து வந்தன. புயல் காரணமாகவும், ஆட்கள் பற்றாக்குறை காரணமாகவும், ஒரு வாரம் நிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் முதல் மீண்டும் பணிகள் துவங்கின. தண்டையார்பேட்டை, டோல்கேட், தாங்கல் நிலையங்களில் நிலைய கட்டுமான பணிகள் துவங்கப்பட்டன.

ஜனவரிக்குள் பணிகளை முடிக்க, மெட்ரோ ரயில் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.